செ.வெ.எண்.127 **செய்திக் குறிப்பு** நாள் 08.02.2010

***அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு பட்டப்படிப்போடு பட்டயப் படிப்பு அல்லது சான்றிதழ் படிப்பு தொடங்குதல்***

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவியர் அவர்களுடைய வேலை வாய்ப்பினைப் பெருக்கிக் கொள்வதற்கு வகை செய்யும் வண்ணம் பட்டயப் படிப்பு அல்லது சான்றிதழ் படிப்புப் பயில வகை செய்யும் திட்டத்தினை மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 10.02.2010 அன்று முற்பகல் 11.00 மணிக்கு சென்னை – 2, காயிதே மில்லத் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் தொடங்கி வைக்கிறார். இவ்விழாவில் உயர்கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற உறுப்பினர் செயலாளர் உள்ளிட்ட அரசு உயரதிகாரிகள் பங்கு கொள்கின்றனர்.

இத்திட்டத்தின் அடிப்படையில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள குறிப்பிட்ட பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இக்கல்லூரிகளில் ஆறு மாதங்கள் அல்லது ஓராண்டு கால பட்டய / சான்றிதழ் படிப்புகள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ / மாணவியர்களுக்கு நடத்தப்படும். இப்படிப்புகள் எந்தவித கட்டாயமுமின்றி மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 62 அரசு கல்லூரிகளிலிருந்து ஏறத்தாழ 3000 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைகிறார்கள். ஆறு மாத காலப் படிப்புப் பிரிவுகளுக்கு மொத்தம் 96 மணி நேரமும், ஓராண்டில் படிப்புப் பிரிவுகளுக்கு மொத்தம் 192 மணி நேரமும் பாடங்கள் நடத்தப்பட்டு, இறுதியில் தொழில்நுட்பக் கல்வி வாரியத்தால் தேர்வு நடத்தப்படும். ஆறு மாதப் பயிற்சிக்கு ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களிலும், ஓராண்டுப் பயிற்சிக்கு ஏப்ரல் மாதத்திலும் தேர்வுகள் நடத்தப்படும். இப்படிப்பு குறித்த இறுதி மதிப்பீடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு, சான்றிதழ் வழங்கப்படும்.

ஆறு மாத காலப் படிப்பிற்கு ஒரு மாணவரிடமிருந்து படிப்புக் கட்டணமாக ரூ.1,500/–ம், ஓராண்டு படிப்பிற்கு ரூ.3,000/–ம் வசூலிக்கப்படும். இக்கட்டணத்தை இரண்டு அல்லது மூன்று தவணைகளில் செலுத்தலாம்.

<u>இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ள சில பாடப்பிரிவுகள்</u>

1) Multimedia, 2) Tally, 3) A.C. Technology, 4) Hardware Servicing, 5) Domestic Wiring, 6) Net Working, 7) Web Designing and Animation, 8) E-Commerce, 9) Driving (Light and Heavy Vehicles), 10) Beautician, 11) Garment Quality Inspection and Export Merchandising, 12) Communication Skill, 13) Office Automation, 14) Survey, 15) D.T.P.

/2

இத்திட்டத்தின் மூலம் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கிய, ஏழை மாணவ / மாணவியர் தாங்கள் பட்டப் படிப்பு பயிலும் காலத்திலேயே, மேற்குறித்த பட்டய / சான்றிதழ் படிப்புகளைப் பயிலுவதன் மூலம் தங்களுடைய வேலை வாய்ப்பினைப் பெருக்கிக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கல்லூரிக் கல்வி இயக்குநர்

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.